## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) செங்கல்பட்டு மாவட்டம், மூவரசம்பட்டு கிராமம், தர்மலிங்கேஸ்வரர் கோயில் தீர்த்தவாரி குளத்தில் மூழ்கி ஐந்து பேர் உயிரிழந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு, தமிழ்நாடெங்கும் முருகன் திருக்கோயில்களில் சிறப்புப் பூஜைகள், தேரோட்டம் மற்றும் தீர்த்தவாரி உற்சவ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சென்னை, நங்கநல்லூரில் வரலாற்றுப் பெருமை வாய்ந்த அருள்மிகு தர்மலிங்கேஸ்வரர் திருக்கோயிலிலும் பங்குனி உத்திரத் திருவிழா காலை முதலே சிறப்பாக நடைபெற்றது. அதில் ஒரு நிகழ்ச்சியாக தீர்த்தவாரி நிகழ்ச்சி, அக்கோயிலிலிருந்து 500 மீட்டர் தூரமுள்ள மூவரசம்பட்டு என்ற இடத்தில் உள்ள குளத்தில் நடைபெறுவது வழக்கம். அக்குளம் 20 அடி ஆழம் கொண்டது, ஓரளவு தண்ணீர் உள்ளது. குளத்தின் அடிப்பகுதியில் சேரும், சகதியும் இருந்ததாகக் கூறப்படுகிறது.*

*நேற்று காலை 9–30 மணியளவில் வழக்கம்போல் சுமார் 20 அர்ச்சகர்கள் சாமி சிலைகளை பல்லக்கில் தீர்த்தவாரி நிகழ்ச்சிக்காக அக்குளத்திற்கு எடுத்து வந்தனர். அக்குளத்தில் அர்ச்சகர்கள் இறங்கி சாமி சிலைகளை தண்ணீரில் நீராட்ட முயன்றபோது, நீச்சல் தெரியாததால், ஒருவர் தண்ணீரில் மூழ்கத் தொடங்கியதை பார்த்த மற்ற அர்ச்சகர்கள், ஒருவர் பின் ஒருவராக அவரைக் காப்பாற்ற முயன்றனர். ஆனால், காப்பாற்ற முயன்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக குளத்தில் மூழ்கத் தொடங்கியதைத் தொடர்ந்து, அங்கிருந்த மற்றவர்கள், அருகில் இருந்த நீச்சல் தெரிந்தவர்களை உதவிக்கு அழைத்தனர், ஆனால், அவர்களது முயற்சி பலனளிக்கவில்லை. நீரில் மூழ்கிய ஐவரும் இறந்துவிட்டனர். அதைத் தொடர்ந்து தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை அழைக்கப்பட்டு, அவர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இறுதியாக இறந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. 1. சூர்யா, நங்கநல்லூர்; 2. ராகவ், மடிப்பாக்கம்;*

3. யோகேஷ்வரன், கீழ்க்கட்டளை; 4. ராகவ், நங்கநல்லூர்; 5. வானேஷ், நங்கநல்லூர்.

மேற்கண்ட ஐந்து நபர்களும் 24 வயதிற்குட்பட்டவர்கள் என்று தெரிய வருகிறது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான குளங்களையும், திருக்கோயில் நிகழ்ச்சிகள் நடைபெறும் குளங்களையும் தூர்வாரும் பணிகளை உடனடியாக இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். மேலும், இளம் வயதிலே இறந்த அந்த ஐவருக்கும் அரசு அறிவித்த நிவாரணம் போதாது. நிவாரணத் தொகையை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இதுபோலவே, விழுப்புரம் மாவட்டம், மயிலம், அருள்மிகு முருகன் திருக்கோயிலில் நாராயணன் என்ற 45 வயதுள்ள பக்தர் ஒருவர் அங்குள்ள குளத்தில் குளித்தபோது, குளத்தில் மூழ்கி இறந்துள்ளார் என்ற செய்தி வந்துள்ளது. இவரது குடும்பத்தாருக்கும் அரசு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து விட்டோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த நங்கநல்லூரில் நடைபெற்ற இந்த நிகழ்வு குறித்து ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ச. சிவகுமார், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. அருள், திரு. தி. வேல்முருகன், திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. மு. ஜெகன் மூர்த்தி, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு. இராம. கருமாணிக்கம், திரு. S.S. பாலாஜி, திரு. ம. சிந்தனை செல்வன், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து, திரு. வி.பி. நாகைமாலி ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

இதுகுறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

**திரு. கு. செல்வபெருந்தகை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நங்கநல்லூர்,மூவரசம்பட்டு அருகில் தர்மலிங்கேஸ்வரர் கோயிலில் தீர்த்தவாரி நிகழ்ச்சியின்போது 5 நபர்கள் அகால மரணமடைந்திருக்கிறார்கள். இறைவனுக்கு தினமும் ஆலயத்தில் அபிஷேகம் செய்பவர்கள், அர்ச்சனை செய்பவர்கள், நாளை மறுநாள் தர்மலிங்கேஸ்வரருக்கு நடக்க இருக்கிற வழிபாட்டிற்கு அனுமதி கேட்டுவிட்டு, நேற்று முருகனுடைய சிலையை எடுத்து, அங்கே தீர்த்தவாரியில் ஈடுபட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே ஆழ்ந்த இரங்கலை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக அந்தக் குடும்பங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதோடுமட்டுமல்லாமல், ஆன்மிகத்தில் அரசியல் கலக்காமல், ஆன்மிகம் வேறு, அரசியல் வேறு, ஆட்சி வேறு என்று உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களை அனுப்பியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரும், உடல் உட்கூறு ஆய்வு முடியும்வரை அங்கேயிருந்து, அவர்களுடைய வீடுகளில் அந்த உடல்களையெல்லாம் ஒப்படைத்து, மாலை அணிவித்துவிட்டு, அங்கேயேயிருந்து உடல்களை அடக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இரண்டு இலட்சம் ரூபாய் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்று அரசியலிலே புற ஆரவாரத்திற்கு மாறாக, அகநாகரிகத்தோடு ஆன்மிகம் வேறு, அரசியல் வேறு என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) எடுத்த நடவடிக்கைகளை நாங்கள் பாராட்டுகிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம். (குறுக்கீடு)

**திரு. கு. செல்வபெருந்தகை:** இனிவரும் காலங்களில் தீயணைப்புப் படை, Ambulance வண்டிகள் இல்லாமல் இப்படிப்பட்ட நிகழ்வுகளை நடத்தக்கூடாது என்று அறிவுறுத்தி

2023 ஏப்ரல் 6] [திரு. கு. செல்வபெருந்தகை]

மக்களைப் பாதுகாப்பதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று தங்கள் வாயிலாக அறிவுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்துள்ள நங்கநல்லூரை ஒட்டியிருக்கின்ற தர்மலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று பங்குனி உத்திரத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் பக்தர்கள் ஏராளமாகக் கூடி, நாளை சிவபெருமானுக்கு வழிபாடு செய்யயிருக்கக்கூடிய அந்தச் சூழலில், அங்கே ஐந்து நபர்கள் தீர்த்தவாரிக் குளத்தில் உயிரிழந்தார்கள் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இந்த மாமன்றத்தின் வாயிலாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவிட்டு, மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு. தா.மோ. அன்பரசன் அவர்களை அனுப்பிவைத்து, உரிய பணிகளையெல்லாம் மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆகவே, இதையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்ற அதேவேளையில், இப்படி குளங்களில் மூழ்குவது, ஆற்றில் மூழ்குவது போன்ற இடங்களில் காவல் துறையை அதிகளவில் ஈடுபடச் செய்து, இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறாவண்ணம் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

**திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து நடைபெற்றவுடனேயே அந்த மாவட்டத்திற்கான நிர்வாக அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களை அனுப்பி, தொடர்ச்சியாக மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய இழப்பீட்டையும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே, இதுபோன்று ஆன்மிக நிகழ்வுகள் தொடர்பாக பல விபத்துகள் நடைபெற்றிருக்கின்றன. இதிலே இரண்டு விஷயங்களை நாம் பார்க்க வேண்டியிருக்கின்றது. ஒன்று, இது

[திரு. S.S. பாலாஜி] [2023 ஏப்ரல் 6

குளத்திலே மூழ்கிய விபத்து. மற்றொன்று, இது திருக்கோயில் சம்பந்தப்பட்ட நிகழ்வு. இது மத நம்பிக்கை சம்பந்தப்பட்டது என்றாலும்கூட, அவர்கள் முறையாக அனுமதியைப் பெறுகின்ற வகையிலே, இதுபோன்ற நிகழ்வுகளை கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, உரிய வழிகாட்டுதல் வழங்கக்கூடிய அளவிற்கு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை விதிமுறைகளை வகுக்க வேண்டும். மேலும், இது ஒரு தனியார் கோயில் என அறிகிறேன். இதுபோன்று நிறைய கோயில்கள் மத நம்பிக்கையின் அடிப்படையில், அவர்கள் நிகழ்த்தக்கூடிய நிகழ்வுகளுக்கு உரிய அனுமதியைப் பெறுவதில்லை. எனவே, கூடுமானவரை இதுபோன்ற திருக்கோயில்களை முடிந்தால், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலே கொண்டு வர வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த நங்கநல்லூர் MMTC Colony, தர்மலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற தீர்த்தவாரி நிகழ்ச்சியில், அதன் அருகிலுள்ள மூவரசம்பட்டு பகுதியிலுள்ள குளத்தில் ஐந்து இளைஞர்கள் மூழ்கி பரிதாபமாக இறந்துள்ளனர். இது சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் பதற்றத்தையும், அனுதாபத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதை அறிந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களை அரசின் சார்பில் அங்கு அனுப்பி, அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். இதுகுறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. ட்டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, பல்லாவரத்தை அடுத்த எம்.எம்.டி.சி. காலனியில் அமைந்துள்ள தர்மலிங்கேஸ்வரர் கோயில்

2023 ஏப்ரல் 6] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

பங்குனி உத்திரத் திருவிழா தீர்த்தவாரி நிகழ்ச்சியின்போது மூவரசம்பட்டு பகுதியிலுள்ள குளத்தில் 5 அர்ச்சகர்கள் மூழ்கி உயிரிழந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இளம் வயதைச் சார்ந்தவர்கள். இதை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களை அங்கு அனுப்பி, அரசின் சார்பிலே அஞ்சலி செலுத்தி, அவர்களுடைய குடும்பத்தினருக்கு உதவித் தொகையையும் வழங்கியிருக்கிறார்கள். அந்த உதவித் தொகையை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும். குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். இனிவருங்காலங்களில், இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாதவாறு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, நங்கநல்லூர் அருகே நேற்று நடந்த இந்தத் துயரச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், காவல் துறை ஆணையர், கூடுதல் ஆணையர் மற்றும் வருவாய்த் துறை உயரதிகாரிகளையும் அங்கு அனுப்பி, உடனடியாக, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டமைக்காகவும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 இலட்சம் நிதியுதவி அளித்தமைக்காகவும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாதவண்ணம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியமைக்காகவும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்தவர்கள் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அந்தக் கோயிலில் உள்ள சுவாமி சிலைகளை உற்சவம் செய்கின்ற அந்தத் தொழிலை மட்டும் செய்கின்ற அந்தக் குடும்பத்தாருக்கு வேறு எந்தவிதமான வருமானமும் இல்லை. எனவே, கருணை அடிப்படையில், அந்தக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு அரசு வேலை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்கிற அளவில் அரசின் கவனத்தை ஈர்த்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு தமிழக வாழ்வுரிமைக்

கட்சியின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

**திரு. மு. ஜெகன் மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், சென்னை, நங்கநல்லூர் அருகே எம்.எம்.டி.சி. காலனியில் அமைந்துள்ள புகழ்பெற்ற தர்மலிங்கேஸ்வரர் பங்குனி உத்திர தீர்த்தவாரி திருவிழா விமரிசையாக நடைபெற்றது. இதில், புகழ்பெற்ற தர்மலிங்கேஸ்வரர் கோயிலுக்குக் குளம் கிடையாது. கோயில் நிர்வாகம் ஒவ்வொரு முறையும் அருகே உள்ள மூவரசம்பட்டு ஊராட்சி, கங்கையம்மன் கோயில் குளத்தில்தான் தீர்த்தவாரி நடத்துவார்கள். அதிகம் தண்ணீர் உள்ள குளத்தில் அர்ச்சகர்கள் இறங்கி பாராயணம் செய்யும்போது, கடைசியாக இறங்கியவர் எதிர்பாராத விதமாக ஆழமான பகுதிக்குச் சென்றிருக்கிறார். இதில், 5 அர்ச்சகர்களுக்கு நீச்சல் தெரியாத காரணத்தினால், நீரில் மூழ்கி இறந்துள்ளார்கள் என்பது பெரும் அதிர்ச்சியாகவும், வேதனையாகவும் உள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. மு. ஜெகன் மூர்த்தி:** *இதில், கோயில் நிருவாக அர்ச்சகர்கள் குளத்தில் இறங்கும்போது, எவ்வளவு தூரம் தண்ணீர் உள்ளது; நீரில் நின்று இவர்கள் பாராயணம் செய்யலாமா என்று எந்த ஆய்வும் செய்யாமல் இருந்த காரணத்தினால், நேற்று, 5 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இதனால் அந்தப் பகுதி முழுவதிலும் பெரும் பரபரப்பும், வேதனையும் நிலவிக் கொண்டிருக்கிறது. பலியானவர்கள் இளம் அர்ச்சகர்கள். புழுதிவாக்கம், முத்து முகமது தெருவைச் சேர்ந்த ராகவ், வயது 18, நங்கநல்லூர், எம்.எம்.டி.சி. காலனியைச் சேர்ந்த வானேஷ், வயது 22 மற்றும் சூர்யா, வயது 21, புழுதிவாக்கம், ராஜேஸ்வரி நகரைச் சேர்ந்த ராகவன், வயது 22, மடிப்பாக்கம், பாலையா தோட்டம் பகுதியைச் சேர்ந்த யோகேஸ்வரன், வயது 21. இதில், ராகவ், வானேஷ், ராகவன் ஆகிய 3 பேரும் கல்லூரி ஒன்றில் சி.ஏ. படித்துக் கொண்டிருந்தார்கள். சூர்யாவும், யோகேஸ்வரனும் தனியார் துறையில் வேலை பார்த்தவர்கள்.*

2023 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. மு. ஜெகன் மூர்த்தி:** கோயிலிலுள்ள மூத்த அர்ச்சகர்களுக்கு உதவியாக இவர்கள் அர்ச்சகர் பணி செய்து வந்திருக்கிறார்கள். இவர்களுடைய மறைவால் வாடும் பெற்றோர்கள், நண்பர்கள், உறவினர்கள், பக்தர்கள் என அனைவருக்கும் புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், இச்சம்பவம் குறித்து விசாரணைக் குழு அமைத்து, விசாரணை நடத்த அரசு முன்வருமா எனக் கேட்டு, அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நங்கநல்லூர் அருள்மிகு தர்மலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று காலை, இதயம் இருப்பவர்கள் அனைவரும் இரக்கப்படுகின்ற அளவிற்கு நடந்த துயர சம்பவத்தைக் குறித்து, சபையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களும், கம்யூனிஸ்ட் இயக்கங்களைச் சார்ந்த சட்டமன்றக் குழுத் தலைவர்களான திரு. வி.பி. நாகைமாலி அவர்களும், திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. தி. வேல்முருகன் அவர்களும், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த திரு. S.S. பாலாஜி அவர்களும், திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்களும், அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களும் இன்றைக்கு அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்ந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–30

இந்த விபத்து நடந்த அந்தக் குளம் திருக்கோயிலின் குளம் அல்ல. அது பஞ்சாயத்தால் நிருவகிக்கப்படுகின்ற குளம். இந்தக் குளத்தில் கடந்த நான்கு ஆண்டுக் காலமாகத்தான் தீர்த்தவாரி வைபவம் நடந்துகொண்டிருக்கிறது. சுவாமியினுடைய பிரம்மோற்சவத் திருவிழாவை முன்னிட்டு தீர்த்தவாரி நிகழ்வு நடைபெறும். இந்தக் குளத்திற்கு 2021 ஆம் ஆண்டு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், அந்த மாவட்டத்தின் இன்றைய மாண்புமிகு அமைச்சர் அருமை அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன்

அவர்கள்தான் 50 இலட்சம் ரூபாய் செலவிலே நடைபாதை மற்றும் சுற்றுச்சுவர் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளார். சர்வமங்கல சேவா சங்க டிரஸ்ட் என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தி, அதில் 5 பேர் நிருவாகிகளாக இருந்து, இந்தத் திருக்கோயிலை நிருவகித்து வருகின்றார்கள்.

கடந்த ஆண்டு 8–9–2022 அன்று, தொல்லியல் துறை அனுமதி, மண்டலக் குழு அனுமதி, அதேபோல், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் உயர்மட்டக் குழுவான மாநிலக் குழு அனுமதியில்லாமல், இத்திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய முற்பட்டார்கள். உடனடியாக இணை ஆணையர் அவர்கள், 6–9–2022 அன்று பக்தஆஞ்சநேயர் திருக்கோயிலில் இருக்கின்ற செயல் அலுவலரை இந்தத் திருக்கோயிலின் தக்காராக நியமித்தார்கள். உடனடியாக அந்தத் திருக்கோயிலைச் சார்ந்த அந்த டிரஸ்டியினர், மேல்முறையீடு செய்து, ஆணையர் அலுவலகத்திலே மனு செய்திருந்தார்கள். அந்த மனு வருகின்ற 12–4–2023 அன்று விசாரணைக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இதை விலாவாரியாக சொல்வதற்குக் காரணம், தானாக முன்வந்து, இந்த டிரஸ்டியினர் எடுத்துக்கொள்கின்ற இந்தப் பணிகளின் காரணமாக, இப்படிப்பட்ட விபத்துகள் நடைபெறுகின்றன. எது எப்படியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது விலைமதிக்க முடியாத மனித உயிர்கள். அதில் ராகவ், சூர்யா, வானேஷ், யோகேஸ்வரன் மற்றும் ராகவன் ஆகிய 5 விலைமதிப்பில்லாத உயிர்கள் பறிபோய், அவர்களுடைய தாய், தந்தைகளின் கனவுகள் நேற்றைக்கு சிதைந்தபோது, முதல்வர் அவர்கள் படுகின்ற துயரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணராதவர் அல்ல. இரக்கத்தின் இதயத்தை தன்னுள்ளே வைத்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சம்பவம் நடந்தவுடன், உடனடியாக அந்த மாவட்டத்தின் அமைச்சரை அழைத்து, அந்தச் சம்பவத்திற்குக் காரணம் யாரென்று கண்டறிந்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றார்.

அந்தக் குளம், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமானது என்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து இப்படி தீர்த்தவாரி வைபவம் நடக்கின்றபோது, குளத்தை தூய்மையில்லாமலும், தூர்வாராத நிலையிலும் ஏன் வைத்திருந்தீர்கள் என்று கண்டித்தார்கள்.

*2023 ஏப்ரல் 6]* [திரு. பி.கே. சேகர்பாபு]

*நிச்சயமாக, இப்படி ஒரு நிகழ்ச்சி நடத்தப்படுவதை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு அவர்கள் தெரிவிக்கவில்லை. இருந்தாலும், இந்த நேரத்தில் இவ்வளவு பெரிய இழப்பில், அதை ஒரு குற்றமாகச் சொல்ல நான் விரும்பவில்லை. இந்த அளவில், உடனடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைத்துப் பேசினார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள், அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று, ஆறுதல் தெரிவித்து, அவர்களின் இறுதி ஊர்வலம்வரை உடனிருந்து அடக்கம் செய்துவிட்டு வந்ததோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தலா இரண்டு இலட்சம் ரூபாய், அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு நிவாரண நிதியாக வழங்கியிருக்கின்றார்கள். இங்கே, பேசிய உறுப்பினர்கள் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். கடந்த காலங்களில் என்ன நடைமுறைகள் இப்படிப்பட்ட விபத்துகளின்போது பின்பற்றப்பட்டனவோ, அதே நடைமுறையை மாண்புமிகு முதல்வரவர்கள் பின்பற்றியிருக்கின்றார்கள். மேலும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நடக்கக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கண்டிப்பான உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்தப் பிள்ளைகளை இழந்துவாடும் அந்தக் குடும்பத்தாருக்கும், அந்தப் பிள்ளைகள் மறைவால் அந்தப் பகுதியில் நிலவுகின்ற ஒரு துக்ககரமான நிகழ்வுக்கும், ஒட்டுமொத்தமாக எந்தத் துறையாக இருந்தாலும், இந்த ஆட்சிக்கு பங்கிருக்கிறது என்பதால், வருகின்ற காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கும், அதேபோல் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துகின்றபோது, சம்பந்தப்பட்ட டிரஸ்டுகள், அமைப்புகள் துறைக்கு தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளையும் இந்த மாமன்றத்தில் வைத்து, ஆழ்ந்த இரங்கலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக இந்த அவையிலே பதிவிடுகிறேன். அந்தக் குடும்பத்தாருக்கு அவர்கள் கோருகின்ற உதவிகளில் எதையெல்லாம் செய்து தரமுடியுமோ, அதையெல்லாம் செய்து தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்வருவார்கள் என்பதையும் தெரிவித்து, அந்த ஐந்து இளைஞர்களை இழந்துவாடும் அந்தக் குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி.*